**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No. 04/2022</u>**

**<u>நாள் : 22.01.2026</u>**

**ம.சா.** 1 சாட்சி : திருமதி.சாலா

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து சமயத்தில் TN 83 X 8298 என்ற TVS Scooty வானத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். நான் நாட்றாம்பள்ளியில் இருந்து நாயனசேருவுனூர் நோக்கி சென்றுக்கொண்டிருந்தேன். மேற்படி ரோடு எந்த திசை என்று எனக்கு சொல்ல தெரியவில்லை. எனக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் Helmat அணியவில்லை என்றால் சரிதான். நான் வாகனத்தை இடது ஓரமாக செல்வதற்கு பதிலாக தவறான திசையில் (சாலையின் வலது புறத்தில்) சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். மேற்படி வானத்திற்கான பதிவு சான்றிதழ் எனது பெயரில் உள்ளது. விபத்தினால் எனது வாகனத்திற்கு சேதாரம் ஆனது என்றால் சரிதான். எதிரே வந்த வாகனம் மகேந்திரா பிக்அப் வாகனம் ஆகும். அது சரக்கு வாகனம் என்றால் சரிதான். எனக்கு வாகனம் ஓட்ட தெரியாமால் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் தவறான திசையில் வாகனத்தை இயக்கி விபத்து ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரே வந்த சரக்கு வாகனம் மிதமான வேகத்தில் தான் வந்தது என்றால் சரியல்ல. சாட்சி அண்ணா நிறுத்து நிறுத்து என்று சத்தம் போட்டும் வேகமாக வந்து மோதியாதாக கூறுகிறார். விபத்தானது எனது அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சரியல்ல. நான் பால் வியாபாரம் செய்து வருமானம் ஈட்டியதை காட்டும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பால் சோசைட்டிக்கு பால் ஊற்றினால் தான் பில் கொடுப்பார்கள். நான் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று தனிப்பட்ட முறையில் பால் விற்பதால் அதற்கு பில் ஏதும் கிடையாது. சில நபர்கள் எனது வீட்டில் வந்து பால் வாங்கி கொண்டு போவார்கள். நான் பால் வியாபாரம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது சொந்தமாக மாடு இல்லை என்றால் சரியல்ல. அதிகப்படியான நஷ்ட ஈடு பெறும் நோக்கில் பால் வியாபாரம் செய்து மாதம் ரூ. 20,000/– சம்பாதித்து வந்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு நான் திருப்பத்தூர் அரசு

மருத்துவமனைக்கு போனேன். அங்கிருந்து உடனடியாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு தலையில் கொடிய காயம் ஏற்பட்டது. 30.01.20220 முதல் 05.02.2020 தேதி வரை மட்டுமே நான் தருமபுரி அரசு மருத்தவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். எனக்கு எடுக்கப்ட்ட CT Scan Report–ல் No Significant Bony Injury என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. அத்துடன் மற்றொரு CT Scan Report–ல் No Demonstrable abnormality seen என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் MRI Scan Report–ல் தலை நரம்புகளில் பாதிப்பு இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு அவ்வப்போது வலிப்பு வருகிறது அதனால் நான் அவதிப்படுகிறேன். விபத்துக்கு முன்னால் எனக்கு வலிப்பு வந்ததில்லை. விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது பங்களிப்பும் காரணம் என்பதால் 3–ம் எதிர்மனுதார் நிறுவனம் முழு பொறுப்புறுதி ஏற்பது என்றால் சரியல்ல. ஊட்சத்து மற்றும் போக்குவரத்து செலவினங்களை காட்டும் பில்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல.

ஓம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.